**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032

தொலைபேசி 044-22201337

மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in

இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்.91/மா/2024

நாள்28.11.2024

திரு.டி.என்.முஹம்மது ரஃபி, ......... மனுதாரர்
சென்னை–54.

ஆணையர், ......... எதிர்மனுதாரர்
தாம்பரம் மாநகராட்சி.

சென்னை, ஆவடி தமிழ்நாடு ஹவுசிங் போர்டு, HIG கதவு எண். 601. என்கிற முகவரியில் வசிக்கும் திரு. டி.என்.முஹம்மது ரஃபி, என்பவரின் 28.12.2023 மற்றும் 15.07.2024 நாளிட்ட மனுக்கள் இம்முறைமன்ற நடுவத்தில் 28.12.2023 மற்றும் 16.07.2024–ல் பெறப்பட்டு 91/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

சென்னை, ஆவடி தமிழ்நாடு ஹவுசிங் போர்டு, HIG, கதவு எண். 601. என்கிற முகவரியில் வசிக்கும் திரு. டி.என்.முஹம்மது ரஃபி, என்பவர் 28.12.2023 மற்றும் 15.07.2024 நாளிட்ட மனுக்களில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“திரு.டி.என்.முஹம்மது ரஃபி அவர்கள் தனது மனுக்களில் தங்களது M/s.MARS CONSTRUCTION நிறுவனம் தாம்பரம் மாநகராட்சியில் செய்துள்ள TURIP 2014-15. SRP 2015-16, TURIP 2016-17 மற்றும் 2017–18 ஆகிய ஒப்பந்த பணிகள் செய்தது தொடர்பாக தங்களுக்கு வரவேண்டிய நிலுவைத் தொகை ரூபாய் 1,49,38,107/– (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்தி ஒன்பது இலட்சத்து முப்பத்து எட்டாயிரத்து நூற்று ஏழு) பாக்கி உள்ளது என்றும் அதனை பெற்றுத்தர வேண்டுமாறு இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்’’.

2) மேற்கண்ட புகார் மனு மீது தாம்பரம் மாநகராட்சி ஆணையரிடம் 05.01.2024 நாளிட்ட கடிதம் மற்றும் 13.08.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3) ஆணையர், தாம்பரம் மாநகராட்சி தனது 26.09.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தாம்பரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தாம்பரம் பகுதியில் ஏப்ரல் 2011 முதல் நவம்பர் 2017 வரை மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்த பணிகளுக்கு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (EPF) சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களால் செலுத்தப்படாமல் உள்ளதற்கு தாம்பரம்

மாநகராட்சியை பொறுப்பாக்கி EPF அலுவலகத்தால் வழக்கு தொடரப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் மண்டல வருங்கால வைப்பு நிதி ஆணையரின் உத்தரவில் ரூ 21,09,08,721/– செலுத்த இறுதி ஆணை பிறப்பிக்கப்பட்டது.

மேற்படி தொகையை செலுத்தாதபட்சத்தில் தாம்பரம் மாநகராட்சியின் வங்கி கணக்கு முடக்க நேரிடும் என தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தாம்பரம் மாநகராட்சி மூலம் Central Government Industrial Tribunal, Chennai-34 தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. தீர்ப்பாயத்தில் மேற்கண்ட தொகையில் 35 சதவீத தொகை EPF அலுவலகத்திற்கு செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தாம்பரம் மாநகராட்சியால் ரூ 3,00,00,000/– செலுத்தப்பட்டது. அதன் பின்னர் மேற்படி மேல்முறையீட்டு வழக்கில் தாம்பரம் மாநகராட்சி மீதத் தொகையையும் EPF அலுவலகத்திற்கு செலுத்த வேண்டும் என உத்திரவிடப்பட்டது. மேற்படி தீர்ப்பினை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. அதில் 24.01.2024– ஆம் தேதிய உயர்நீதிமன்ற தீர்ப்பில் மாநகராட்சி வங்கி கணக்கை முடக்கம் செய்யக் கூடாது எனவும், மாநகராட்சி சார்பில் மீண்டும் ரூ3,00,00,000/– EPF அலுவலகத்திற்கு உடனடியாக செலுத்தவும், மேலும் இவ்வழக்கு தொடர்பாக Central Government Industrial Tribunal, Chennai-34 தீர்ப்பாயத்திலேயே மேல்முறையீடு செய்யவும் உத்திரவிடப்பட்டது. அதன்படி ரூ3,00,00,000/– EPF அலுவலகத்திற்கு செலுத்தப்பட்டு, தற்போது Central Government Industrial Tribunal, Chennai-34 தீர்ப்பாயத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற அறிவிப்புடன் இணைத்து வரப்பெற்ற M/s.MARS Construction நிறுவனத்திற்கு TURIP 2014–15, SRP 2015-16, TURIP 2016-17 மற்றும் 2017–18 ஆகிய திட்டப்பணிகளுக்கு பட்டியல் தொகை மற்றும் PSD தொகை வழங்க வேண்டி உள்ளது குறித்து அறிக்கை அளிக்க கோரப்பட்டது.

<u>பட்டியல் – I</u>

மேற்படி EPF அலுவலக உத்தரவில் M/s.MARS Construction நிறுவனத்திற்கு 2011 முதல் 2017 ஆம் ஆண்டு வரை கீழ்க்கண்ட விவரப்படி தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

| Sl.No. | Month/Year | Total Amount Credited (Rs.) | TDS deducted (Rs.) | Actual Amount (Rs.) | Labour 25% | EPF Contribution to be remitted (Rs.) |
|---|---|---|---|---|---|---|
| 1) | Sept-15 | 42,80,000 | 85,600 | 41,94,400 | 10,48,600 | 2,72,636 |
| 2) | Sept-15 | 38,95,000 | 77,900 | 38,17,100 | 9,54,275 | 2,48,112 |
| 3) | Sept-15 | 25,00,000 | 50,000 | 24,50,000 | 6,12,500 | 1,59,250 |
| 4) | Dec-15 | 6,10,000 | 12,200 | 5,97,800 | 1,49,500 | 38,857 |
| 5) | May-16 | 31,00,000 | 62,000 | 30,38,000 | 7,59,500 | 1,97,470 |
| 6) | May-16 | 28,00,000 | 56,000 | 27,44,000 | 6,86,000 | 1,78,360 |
| 7) | Sept-16 | 41,20,000 | 82,400 | 40,37,600 | 10,09,400 | 2,62,444 |
| 8) | Oct-16 | 29,95,204 | 59,904 | 29,35,300 | 7,33,825 | 1,90,795 |
| 9) | Nov-16 | 87,20,000 | 1,74,400 | 85,45,600 | 21,36,400 | 5,55,464 |
| 10) | Jun-17 | 34,00,000 | 68,000 | 33,32,000 | 8,33,000 | 2,16,580 |
| 11) | Aug-17 | 8,20,000 | 16,400 | 8,03,600 | 2,00,900 | 52,234 |
| 12) | Oct-17 | 29,00,000 | 58,000 | 28,42,000 | 7,10,500 | 1,84,730 |
| **Total** | | **4,01,40,204** | **8,02,804** | **3,93,37,400** | **98,34,400** | **25,56,932** |

பட்டியல் II

மேலும் M/s.MARS Construction நிறுவனம் TURIP 2016-17 மற்றும் 2017–18 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கும் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி செலுத்த வேண்டி உள்ளது.

| Sl. No. | Month / Year | Total Amount Credited (Rs.) | TDS deducted (Rs.) | Actual Amount (Rs.) | Labour 25% | EPF Contribution to be remitted (Rs.) |
|---|---|---|---|---|---|---|
| 1) | 2017-18 | 94,55,946 | 1,89,119 | 92,66,827 | 23,16,707 | 6,02,344 |
| 2) | | 42,96,312 | 85,926 | 42,10,386 | 10,52,597 | 2,63,149 |
| 3) | 2018-19 | 27,12,436 | 54,249 | 26,58,187 | 6,64,547 | 1,72,782 |
| 4) | | 25,44,882 | 50,898 | 24,93,984 | 6,23,496 | 1,62,109 |
| 5) | 2019-20 | 79,37,982 | 1,58,760 | 77,79,222 | 19,44,806 | 5,05,649 |
| மொத்தம் | | 2,69,47,558 | 5,38,952 | 2,64,08,606 | 66,02,153 | 17,06,033 |

எனவே, பட்டியல் I மற்றும் II தெரிவிக்கப்பட்டுள்ளவாறு M/s.MARS Construction நிறுவனத்தின் பெயரில் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி தொகை செலுத்தி EPF அலுவலகத்திலிருந்து தடையில்லா சான்று பெற்று சமர்ப்பிக்கும் பட்சத்தில். மேற்படி நிறுவனத்திற்கு பட்டியல் தொகை மற்றும் PSD தொகை விடுவிப்பது குறித்து பரிசீலித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்துள்ளார்.

3) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 21.11.2024 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 29.10.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

இந்த நிலையில் மனுதாரரின் மனு தாம்பரம் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவை பரிசீலிக்கப்பட்டது. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரிய வருகின்றன.

"மனுதாரர் தங்களது M/s. Mars Construction நிறுவனம் தாம்பரம் மாநகராட்சியில் செய்துள்ள ஒப்பந்த பணி தொடர்பாக அவர்களுக்கு வரவேண்டிய நிலுவைத் தொகையை பெற்றுத்தர கோரியுள்ளார்.

தாம்பரம் மாநகராட்சி ஆணையர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தாம்பரம் பகுதியில் ஏப்ரல் 2011 முதல் நவம்பர் 2017 வரை மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்த பணிகளுக்கு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (EPF) சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களால் செலுத்தப்படாமல் உள்ளதற்கு தாம்பரம் மாநகராட்சியை பொறுப்பாக்கி EPF அலுவலகத்தால் வழக்கு தொடரப்பட்டு இறுதி ஆணையில் வருங்கால வைப்புநிதி ஆணையர் ரூ.21,09,08,721/–ஐ செலுத்த ஆணை பிறப்பித்துள்ளார். மேற்படி தொகையை செலுத்தாத பட்சத்தில் தாம்பரம் மாநகராட்சியின் வங்கி கணக்கினை முடக்க நேரிடும் என தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து தாம்பரம் மாநகராட்சி Central Government Industrial Tribunal, Chennai–34–ல் மேல்முறையீடு செய்ததை தொடர்ந்து மேற்கண்ட தொகையில் 35% EPF அலுவலகத்திற்கு செலுத்த தெரிவிக்கப்பட்டதன் காரணமாக தாம்பரம் மாநகராட்சியால் ரூ.3,00,00,000/– செலுத்தப்பட்டுள்ளது. அதன் பின்னர் மேல்முறையீட்டு வழக்கில் மீதித் தொகையையும் EPF அலுவலகத்திற்கு செலுத்திட உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பினை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. 24.01.2024–ம் தேதிய சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பில் மாநகராட்சி வங்கி கணக்கை முடக்கம் செய்யக் கூடாது எனவும் மாநகராட்சி சார்பில் மீண்டும் ரூ.3,00,00,000/– EPF அலுவலகத்திற்கு உடனடியாக செலுத்தவும், மேலும் இவ்வழக்கு தொடர்பாக Central Government Industrial Tribunal,

Chennai–34 தீர்ப்பாயத்திலேயே மேல்முறையீடு செய்ய உத்திரவிடப்பட்டுள்ளது. அதன்படி மாநகராட்சி ரூ.3,00,00,000/–ஐ EPF அலுவலகத்தில் செலுத்தியுள்ளது. Central Government Industrial Tribunal, Chennai–34 தீர்ப்பாயத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது என்பதனை தாம்பரம் மாநகராட்சி ஆணையரின் அறிக்கையிலிருந்து அறிய முடிகிறது.

இம்மாதியான நிகழ்வுகளில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்டம் 2014 ல் பிரிவு 10 (3) (b) ல் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

10 (3) The Ombudsman shall not enquire into matters relating to:-

(a) xxx

(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of inquiries Act, 1952 or any matter Pending before a Court.

எனவே மேற்கண்ட சட்ட பிரிவில் தெரிவித்துள்ளபடி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என்பதால், இப்பொருள் தொடர்பான மேல் நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறை மன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2024–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 28–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) Thiru.T.N.Mohammed Raafi,
HIG No.601, TNHB, Avadi,
Chennai-600 054.

2) ஆணையர்,
தாம்பரம் மாநகராட்சி,
தாம்பரம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண். 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028

4) ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண். 75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ. / உதிரி

/ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).